மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 204/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ராமலிங்கம் | தேதி : 13.10.25 |
| வயது : | த/பெ : ஈஸ்வரமூர்த்தி |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>13.10.25 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2. 29.07.1989 ம் தேதி சிவகாமிக்கு தனுஷ்கோடி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். 22.11.2018 ம் தேதி சுடலை வீர பாண்டியனுக்கு முத்துலெட்சுமி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். வில்லங்கச்சான்றின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும். தபசில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.13 20:07:15 +0530

இடத்தினை காண்பிக்கும் புல வரைபடத்தின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும்.

3. 13.09.2021ம் தேதி தட்டாப்பாறை காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது கொடுக்கப்பட்ட புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும். பொதுப்பாதையை காண்பிக்கும் புகைப்படங்களை(2 எண்ணிக்கை)தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆகும்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.13 20:07:20 +0530